**FRIDAY SERMON/ வெள்ளிக்கிழமை குத்து.ஃபா**

**26 May 2017 (29 Shabaan 1438 Hijira)**

# THE VALUE OF RAMALAN

# ரமலானின் மதிப்பு



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

**ச**லாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

**அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்,** இன்று 2017 மே 26-ம் தேதி மயோட்டியாவில் நம் பள்ளிவாயில் அதிகாரபூர்வமாக செயல்பட ஆரம்பித்திருக்கின்றது. நம் உறுப்பினர்கள் புதிதாக கட்டப்பட்ட பள்ளிவாயிலில் அவர்களின் முதலாவது ஜுமாவும் தொழுகையும் நடத்திக்கொண்டனர். **"ஹஸ்ரத் உம்முல் மும்மினீன் பசல் அமேன மஸ்ஜித்"** என்றாகும் பள்ளி வாயிலின்

பெயர். 2017 மே 25-ம் தேதி அதாவது இன்று நம் உறுப்பினர்கள் ஒரு பிரத்தேகமான “மீற்றிங்” (Meeting) நடத்திக் கொள்ளவும் பின்னர் ஒன்றிணைந்து சாப்பிட்டு கொள்ளவும் செய்தனர். அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ். மயோட்டியாவில் நம் உறுப்பினர்கள் உண்மையில் மிக நல்ல செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். (தீன் விஷயத்திலும் பள்ளி நிர்மித்தல் விஷயத்திலும்) தீயசக்திகள் ஒரு துண்டு இரும்பு சீற்றினை எடுத்துச் சென்றார்கள். ஆனால் அதற்கு பிறகு அல்லாஹ் ஒன்றுக்கு பதிலாக அதே இடத்தில் ஏராளம் இரும்பு சீற்றுகளை உருவாக்கியிருக்கின்றான். இப்போது நம் உறுப்பினர்களுக்கு அவர்களின் பள்ளிவாயில் வெற்றிகரமாக நிறைவுபெற்றிருக்கின்றது. அப்பள்ளிவாயில் இரும்பு சீற்றுகளைக் கொண்டு கட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் அதன் தயாரிப்பு ஹஸ்ரத் முஹம்மது(ஸல்)வின் காலகட்டத்தில் நிகழ்ந்த ஒரு விஷயத்தை நினைவூட்டுகின்றது. அன்று அங்கு தடிகளை கொண்டு பள்ளிவாயில் கட்டிக் கொண்டனர். மேல்க்கூரை ஈச்சமரத்தின் மடலும் அதன் இலைகளுமாகயிருந்தது. ஆனால் இமான் “கோண்கிரீட்” போறு ஆற்றல் வாய்ந்ததாகயிருந்தது.

அல்லாஹ்வின் கலீ∴பாவாகவும் புரட்சி இமாமாகவும் அதிகாரபூர்வமாக அல்லாஹ் என்னை எழும்பச்செய்து இன்று அல்லாஹ்வின் அருட்களால் 9 வருடம் பின் சென்றிருக்கின்றது. 2008 மே 26-ம் தேதி இரவில் அதாவது மஹ்ரீப் இஷா தொழுகைக்கு பின்பு எனக்கு அல்லாஹ் வெளிப்பாடுகள் இறக்கிகொண்டு இந்நூற்றாண்டின் அல்லாஹ்வின் கலீ∴பா என்று தெரியப்படுத்திக் கொள்ள கூறினார். ஆகவே ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் வரலாற்றில் மே மாதம் 26-ம் தேதி சிறப்புமிக்க தினமாகும். அதைப் போன்று உங்களுக்கு நன்கு தெரியும் மே மாதம் 26-ம் தேதி நம் அன்புக்குரிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் வபாத்தாகியதும் அத்தினத்திலாகும். அல்லாஹ் அன்னாரை செர்கீய புத்துணர்ச்சியைக் கொண்டு ஆசீர்வதிப்பானாக! அவனது முடிவில்லாத கருணையும், அன்பும் அன்னாரின் மீது பொழிவானாக! ஆமீன்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின், யூ டியூப் சானல் (Youtube Channel) ஆரம்பித்து இன்று {26 மே 2017} 5 வருடங்கள் பின் சென்றிருக்கின்றது என்பதும் இத்தருணத்தில் நினைவு கூருகின்றேன். அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்.

# Announcements

## அறிவிப்புகள்

1. அல்லாஹ்வின் அருட்களால் **முகர்றம் அமீர் டாக்டர். தாஹிர் சாஹிபும்** அன்னாருடன் சார்ந்த மற்று உறுப்பினர்களும் கேரளாவின் வடக்கு பகுதியில் மிக மகத்தான முயர்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர். வடக்கு பகுதியை சார்ந்த அனைத்து மக்களுக்கும் நம் துண்டுபிரசுரங்களை வழங்கி கொள்வதில் ஈடுபட்டிருக்கின்றனர். அதில் அவர்கள் வெற்றியடைந்திருக்கின்றார்கள்.



2. **கெ.பி. சம்சுத்தீன்** சாஹிப் கலீ:.பத்துல்லாஹ்வின் வருகையின் முக்கியத்துவத்தை குறித்த நோட்டீஸ்கள் பள்ளிகளில் எட்டவைக்கும் முயற்ச்சிகளில் அவர் ஈடுபட்டிருக்கின்றார். அன்னார் தனியாக இந்த முயற்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றார். ஆனால் அல்லாஹ், அன்னாரின் கூடவேயிருந்தான். அல்ஹம்துலில்லாஹ்.



3. இட்றிபிள் தலாக் (Triple Talaq) என்ற விஷயத்தை அடிப்படையாக்கி கொண்டு திருக்குர்ஆனுடையவும் திருநபி வசனத்தினுடையவும் அடிப்படையில் ஒரு பேருரையாற்ற சௌத் கேரளா **அமீர் முகர்றம் ஜமாலுத்தீன் சாஹிப்**பிற்கு ஒரு அழைப்பு தலைநகரில் நின்று கிடைத்தது (பேராசிரியர் : என் பணிக்கர் பவுண்டேஷனிலிருந்து).[redacted]அந்த கூட்டத்தில் பிரபலர்கள் பங்கேற்றனர். என் கட்டுரைகளையும் வெள்ளிக்கிழமை பேருரைகளையும் அடிப்படையாக்கி கொண்டு அன்னார் (அமீர்) பேசிக்கொண்டார். பெரும்பாலானோர்களும் அன்னாரின் அந்த சொற்பொழிவை பாராட்டிக் கொண்டனர். பெரும்பான்மை முஸ்லீம்களும் மூன்று தலாக் சேர்த்து கூறுவது சரியான முறை என நம்பிக்கொள்கின்றனர். அந்நம்பிக்கை மீதான எதிர்ப்பு சர்வ சாதாரணமாக இருப்பதால், இவ்விஷயத்தை குறித்துள்ள நம் கருத்தை அமீர்சாஹிப் அங்கு கூறியபோது பொது மக்கள் அதை மிக நல்ல நிலையில் வரவேற்றனர். இறைத்தூதர் என்ற நிலையிலும் எளிய சேவகன் என்ற நிலையிலும் என்வாழ்க்கை வரலாறு பகுதியும் அக்கூட்டத்தில் படித்துக் கொள்வதற்கான வாய்ப்பையும் அன்னார் பயன்படுத்திக் கொண்டார்.



4. ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் ஆன்மீக தலைவர் என்ற நிலையில் நானும் என் ஜமாஅத்தும் பிரிட்டனில் மாஞ்சட்டில் இந்த வாரம் முதலில் நிகழ்ந்த கொடூரமான தாக்குதலை வன்மையாக கண்டிக்கின்றோம். இந்த விஷயத்தைக் குறித்து மிக விரிவாக நான் முன்பு பேசிக்கொண்டதேயாகும். வெகுவிரைவில் எங்கள் வெப்சைட் மூலமாக அதை வெளியிட்டுக் கொள்வோம்.

# The Value of Ramadan

## ரமலானின் மதிப்பு அல்லது விலை

ரமலான் என்பது அல்லாஹ் முஸ்லீம்களுக்கு வழங்கியிருக்கும் ஒரு மாபெரும் அருளாகும். இதற்கு போதுமான தகுதியை நாம் வழங்கிகொண்டால் மட்டுமே அதுவாயிலாக கிடைக்கும் அருட்களை நமக்கு அடைந்துவிட முடிவது. அல்லாவிட்டால் எந்த பயனுமின்றி ரமலான் மேலும் மேலும் வந்தும் சென்றுமிருக்கும். ரமலானின் நன்மையை எடுத்துரைக்கும் ஒரு நபி மொழியை நான் உங்கள் முன்னால் வைக்கின்றேன். அபூமசூத் அல்சிபாரி (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கும் ஒரு கதீஸில் காணலாம். ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

**“சரியான முறையில் ரமலான் மாதத்தின் முக்கியத்துவத்தைக் குறித்தும் அதன் விலையும் நிலையும் பற்றியும் என் சமுதாயம் உணர்ந்திருந்திருந்தால் எஞ்சும் வருடங்கள் அனைத்தும் ரமலானாகயிருக்க அவர்கள் ஆசைப்பட்டிருந்திருப்பார்கள்”**

சல்மான்(ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்துள்ள மற்றொரு கதீஸில் “சஆபான்” இறுதி நாளில் தூதுவஅரசன்(ஸல்) அவர்கள் ஒரு பேருரையாற்றினார். அதில் அன்னார் கூறினார். **“ஏய் மக்களே ஒரு மகத்தான மாதம் இதோ உங்களை எட்டப்போகின்றது. இந்த அருளுக்குரிய மாதத்தில் 1000 மாதங்களைவிட பிரதிபலன் கிடைக்கும் ஒரு இரவுண்டு. இந்த மாதத்தில் பகல் நோன்பு நோர்ப்பது அல்லாஹ் உங்களுக்கு கட்டாயமாக்கியிருக்கின்றான். இரவில் சுன்னத்து தொழுகையும் நபல் தொழுகையும் வழங்கியிருக்கின்றான்”.** அதாவது திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறியிருப்பது போன்று “தஹ்ஜீத்” தொழுகையும் அதைப்போன்று ஹஸ்ரத் உமர்(ரலி) அவர்கள் நடைமுறைப்படுத்திய மிக அழகானதும் மகத்துவமுடையதுமான நவீன விஷயமான தறாவிஹ் தொழுகையும் செய்ய வேண்டும். அத்தோடு சேர்த்து உணர வேண்டிய விஷயம் அனைத்து முஸ்லீம்களும் ஒரேயொரு சங்கமாக, பிரிவின்றி, ஒரு இமாமின் கீழ் ஒற்றுமையின் உண்மையான நிலையை உயிருடன் நிலைநாட்டிக் கொள்ள முயற்ச்சிக்க வேண்டும் என்பதை. எல்லா முஸ்லீம்களும் ஒன்றிணைந்து ஒரு இமாமின் தலைமையில் ஹஸ்ரத் உமர்(ரலி)

வின் உண்மையான தூயநோக்கத்தை போன்று மாறிட வேண்டும். குறிப்பாக உங்களுக்காக ஒரு இமாமை அல்லாஹ் எழும்பச் செய்திருக்கும் இக்காலகட்டத்தில், சீரமைப்பின் இமாமையும் அவனது கலீஃ.பத்துல்லாஹ்வையும் தோற்றுவித்திருக்கும் இக்காலகட்டத்தில் (அன்னாரை ஏற்றுக் கொள்வதன் வாயிலாகவே) பிரிவுகள் அழிந்துக் கொள்கின்றது. தனித்தனியாக குலைந்து கிடப்போர்களையும், தனித்தனியாக தொழுவோர்களையும் மேலும் அனைத்து மக்களையும் ஒன்றாக மாற்றிடவே (அன்னாரின் வருகையின் நோக்கம்)

நன்மை வாய்ந்த செயல்கள் வாயிலாக எவர் ஒருவர் அல்லாஹ்வின் அருகாமையை அடைய விரும்புகின்றாரோ அத்தகையாளர்களுக்கு, மற்று நேரங்களிலான ஒரு **“பர்ளு”** தொழுகையின் பிரதிபலன் அளிக்கப்படுகின்றது. (இம்மாதத்தில்) எவர் ஒருவர் ஒரு பர்ளு தொழுகையை செய்கின்றாரோ அவருக்கு மற்று நேரங்களிலானா 70 பர்ளு தொழுகையின் பிரதிபலன் வழங்கப்படுகின்றது.

இந்த மாதம் பொறுமையின் மாதமாகும். பொறுமையின் பிரதிபலன் சொர்க்கமேயாகும். இம்மாதம், உண்மையான நம்பிக்கையாளர்களின் ரிஸ்க்கை அதிகரித்துக் கொள்ளும் மாதமாகும். நோன்பு நோற்கும் ஒருவருக்கு அஸ்தமன வேளையில் நோன்பை திறப்பதற்கான உணவை வழங்கிகொண்டால், உணவு வழங்கிக்கொள்பவரின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது. நரக தண்டனையிலிருந்து அவருக்கு மீட்சிகிடைக்கின்றது. மட்டுமின்றி உணவு அளிப்பவருக்கு நோன்பு நோற்ப்பவருக்கு கிடைக்கும் அதே பிரதிபலன் வழங்கப்படுகின்றது. ஆனால் நோன்பு நோற்ப்பவர் பெறும் பிரதிபலனில் எவ்வித குறைவும் இருப்பதில்லை.

இந்த சந்தர்ப்பத்தில், நாங்கள் **“அல்லாஹ்வின் தூதரே! நோன்பு நோற்பவருக்கு அதை திறந்து கொள்வதற்கான உணவை அளிப்பதற்கு நாங்கள் அனைவரும் வசதிவாய்ந்தவர்களல்ல.** திரு நபி பதிலளித்தார், **நோன்பு திறக்க ஒரு பேரீச்சம்பழம் வழங்கவோ, ஒரு டம்ளர் தண்ணீர் வழங்கவோ, அல்லது கொஞ்சம் பால் வழங்கவோ செய்தாலும் அல்லாஹ் அதே பிரதிபலன் அளித்துக் கொள்கின்றான்.** இந்த மாதம் அதன் ஆரம்பத்தில் அல்லாஹ்வின் கருணை இறங்கி கொள்கின்றது. இம்மாதத்தின் மத்தியில் மன்னிப்பு இறங்கிகொள்கின்றது. இம்மாதத்தின் முடிவு நரகமீட்சியின் வேளையாகும். இந்த மாதம் எவர் ஒருவர் அவனின் அடியார்களின் சுமைகளை குறைத்துக் கொள்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் மன்னிப்பு அளித்துக் கொள்கின்றான். நரகத்தின் அக்கினியிலிருந்து அவருக்கு மீட்சியை அளிக்கின்றான்.

இந்த மாதத்தில் நான்கு விஷயங்கள் மிக அதிகமாக செய்ய வேண்டும். அதில் இரண்டு விஷயங்கள் என்பது உங்களை படைத்தவனை மகிழ்ச்சியுடையவனாக்கி கொள்வதாகும். மற்று இரண்டு விஷயங்கள் இந்த விஷயத்தை செய்யாமல் அதை நிறைவுபடுத்திட ஆகாது. உங்களின்

இறைவனை மகிழ்ச்சியுடையவனாக்குவதற்கான முதல் விஷயம் "லா இலாஹ இல்லல்லாஹ் (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வின்றி வேறெவருமில்லை) என்ற "திக்கிரை" மேலும் மேலும் கூறிக் கொள்ள வேண்டும். இரண்டாவது விஷயம் மேலும் மேலும் பாவமன்னிப்புக்காக மன்றாடிக் கொள்ள வேண்டும் என்பதாகும். இவையின்றி உங்களுக்கு செய்ய முடியாத விஷயம் சொர்க்கத்தின்பால் நுழைய மன்றாடிக் கொள்தல் என்பதும் நரக தண்டனையிலிருந்துள்ள அடைக்கலத்திற்காக அவனிடம் உருக்கத்துடன் வேண்டிக் கொள்தல் என்பதும் ஆகும்.

நோன்பு நோற்பவருக்கு எவர் ஒருவர் குடிப்பதற்கு தண்ணீரை அளிக்கின்றாரோ அவருக்கு ஆகாயத்திலிருந்து தண்ணீரை அருந்திக் கொள்ள அல்லாஹ் அனுமதி வழங்கி கொள்வான். அத்தண்ணீரை அருந்திக் கொள்பவருக்கு, சொர்க்கத்தில் நுழையும் வரையில் தாகம் இருப்பதில்லை.

நோன்பு நோற்ப்பவர் நோன்பு நோற்கும்பொழுது ஆறு விஷயங்களில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அபூ உபைத(ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்திருக்கின்றார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறுவதாக நான் கேட்டேன்.

**"நோன்பு நோற்பை மதித்துக் கொள்வோருக்கு அது ஒரு கேடயமாகின்றது"** (இப்னுமாஜ.∵ நிசாயி ∴ ஹக்கீம்)

கேடயம் ஒருவருக்கு பாதுகாப்பு அளித்து கொள்வதைப் போன்று நோன்பு மனிதனை பகைவனிலிருந்து பாதுகாத்துக் கொள்கின்றது. அதாவது சாத்தானிலிருந்து அவருக்கு பாதுகாப்பை அளிக்கின்றது. மற்று ஹதீஸுகளில் நின்று நாம் புரிந்துக் கொள்கின்றோம். நோன்பு நோற்பு விண்ணுலகத் தண்டனைகளிலிருந்து அல்லாஹ் நமக்கு பாதுகாப்பை வழங்கிக் கொள்கின்றான் மட்டுமின்றி நரக தீயிலிருந்தும் நமக்கு இரட்சிப்பு கிடைக்கின்றது. ஒரு முறை எவரோ ஒருவர் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களிடம் வினவினார். நோன்பு எதை அழித்துக் கொள்கின்றது? தூய தூதர்(ஸல்) அவர்கள் பதிலளித்தார் **"பொய் கூறுவதை, பின்பில் நின்று குத்துவதை, தீவிரமான ஆவேசத்தை, வீணான பேச்சுவார்த்தையை".** தூயதூதர்(ஸல்) அவர்களின் இந்த வசனத்தின்பால் நீங்கள் ஆழமாக சென்று கொண்டால் அன்னார்(ஸல்) கூறிக்கொண்டார் பொய் கூறுவதும், பின்னிலிருந்து குத்துவதும், தீவிர ஆவேசமும் வீணான பேச்சுகளும் நோன்பை அழித்துக் கொள்கின்றது என உணரயியலும். உணவு பொருட்கள் நோன்பை முறித்துக் கொள்வது போன்று! ஆகவே ஒருவர் இவ்வகையில் செயல்பட்டால் நோன்பு நோற்பது மூலம் கிடைத்திடும் அனைத்து பிரதிபலனும் அருட்களும் அவருக்கு இழக்க நேற்கின்றது. விடியற்காலையில் ஒருவர் எழும்பி அவர் மேற்கொண்ட அனைத்து தியாகங்களும் அல்லாஹ்வும் அவனது தூதரும் கற்பித்த எல்லா போதனைகளும் பின்பற்றி கொண்டபின்

அந்நாளின் இறுதியில் (மாலையில்) தடை செய்யப்பட்டிருக்கும் ஏதேனும் விஷயத்தில் அவர் ஈடுபட்டுக் கொள்வது மூலம் அனைத்தையும் அவர் இழந்துவிடுகின்றார். இது உண்மையில் மிக கௌரவம் வாய்ந்த ஒரு பாவமாகும். குறிப்பாக இந்த அருளுக்குரிய மாதத்தில் அதாவது இந்த ரமலான் மாதத்தில்.

**ஆகவே, நோன்பு நோற்கும் போது நாம் ஆறுவிஷயங்களில் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டும்.**

1. நோன்பு நோற்பவர் அவரது கண்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். விலக்கப்பட்ட விஷயங்களில் அவர் பார்வையிடாமலிருக்க வேண்டும். நம் பிரியதூதர்(ஸல்) கூறினார், ஒரு பார்வை போதும் அது சாத்தானிடமிருந்து வரும் ஒரு அம்பை போன்றாகின்றது. ஆகவே அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்றவர்கள் தவறான விஷயங்களை பார்வையிடுவதிலிருந்து தம் கண்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அது அன்புக்குரியவர்களிடமான பேச்சுவார்த்தையானாலும் சரி. அது தொலைபேசி வழியாகட்டும் அல்லது மெயில் வழியாகட்டும்! நீங்கள் மிக கவனமுடையவராகயிருக்க வேண்டும். காரணம் உங்களின் இதயத்தின்பால் இருக்கும் கடுகுமணி ஈமானைக்கூட அது வாயிலாக அல்லாஹ் நிக்கி கொள்வான். குறிப்பாக அல்லாஹ் அவனது தீனின் வேலையை செய்வதற்காக உங்களை தேர்ந்தெடுத்திருக்கின்றான். ஆகவே நீங்கள் மிக நல்ல நிலையில் செயல்படுங்கள். நீங்கள் ஒரு தெரு போக்கிரியை போன்று பருமாறாமலிருங்கள். விலக்கப்பட்டிருக்கும் அனைத்து விஷயங்களிலிருந்தும் நீங்கள் அகன்று நில்லுங்கள். உங்கள் மீது அல்லாஹ் பொழிந்த மரியாதையையும் மகத்துவத்தையும் நீங்கள் பாதுகாத்திட வேண்டும். அல்லாஹ்வின் திரு தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**“தெய்வீகமாக உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் மரியாதையும் மகத்துவமும் நீங்கள் வெளிப்படுத்திக் கொண்டால் உங்களின் ஈமானுக்கு அல்லாஹ் ஆற்றலும் வல்லமையும் வழங்கி கொள்வான். அதை உங்களுக்கு அனுபவித்துக் கொள்ளவும், நம்பிக்கையின் இனிப்பை உங்கள் இதயங்களிலிருந்து ருசித்துக் கொள்ளவும் முடிந்துவிடும்”.**

தடை செய்யப்பட்ட அனைத்து விஷயங்களிலிருந்தும் ஒருவர் தம் நாவை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதாவது பொய் கூறிக் கொள்தல், வீணான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொள்தல், பின்னால் நின்று குத்திக் கொள்தல், விவாதம் செய்து கொள்தல், தவறான பேச்சு வார்த்தைகளில் உட்பட்டுக் கொள்தல் போன்றவைகள். புகாரியில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் ஒரு

கதீஸுலிருந்து **"நோன்பு நோற்பவருக்கு நோன்பு ஒரு கேடயமாகும்"** என நாம் வாசிக்கின்றோம். அதனாலாகும் நோன்பு நோற்பவரிடம் கூறப்படுகின்றது, நோன்பு நோற்பவர் வீணான அனைத்து விஷயங்களிலிருந்தும் விலகி நிற்க வேண்டும் என்று. ஒருவர் நம்மிடம் பிரச்சனைக்கு வந்தால் கூட நாம் அவர்களிடம் பண்புடன் கூற வேண்டும், நான் நோன்பு நோற்ப்பவனாகயிருக்கின்றேன் என்று. மற்றொரு வார்த்தையால் கூறிக் கொண்டால் பிரச்சனைகளை எழும்பச்செய்யும் எந்த ஓர் சூழ்நிலையும் உங்களிடமிருந்து வெளிப்படக்கூடாது. மேலும் வேறொருவர் அவ்வகை பிரச்சனைகளை உருவாக்கிடமுயற்ச்சித்தால் கூட அந்த அபாயத்தில் விழாமலிருங்கள்

பரிசுத்த தூதர்(ஸல்) அவர்களின் காலகட்டத்தில் இரண்டு பெண்கள் நோன்பு நோற்றார்கள். முடிவில் அப்பெண்களின் பசி எல்லையை அடைந்துவிட்டது. அவர்கள் மரணத்தின் அருகில் எட்டிவிட்டார்கள். சஹாபிகள் அவர்களை பார்க்க சென்றார்கள். அப்பெண்களுக்கு ஒவ்வொரு பாத்திரங்களை வழங்கி கொண்டார்கள். அதில் வாந்தி எடுத்துக்கொள்ள கூறினார்கள். பின்னர் அதை பார்வையிட்டபோது அதில் இரத்தமும் மாமிசத்துண்டுகளும் இருந்தன. சஹாபாக்கள் அற்புதமடைந்தனர். தூய தூதர்(ஸல்) அவர்கள் அவர்களிடம் கூறினார். இந்த இரண்டு பெண்களுக்கும் அல்லாஹ் அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டதால் நோன்பு நோற்றார்கள். என்றிருந்தும் அவர்கள் இரண்டுபேருக்கும் மீது அதை தடை செய்யப்பட்டதால் அவர்கள் நோன்பை இழந்துவிட்டார்கள். அவ்விருவரும் ஒரு இடத்திலிருந்து பிற மக்களின் குற்றகுறைகளைப்பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

பின்னிலிருந்து குத்திக் கொள்தல் என்பது நோன்பு நோற்பவர் ஒரு பொழுதும் செய்யக்கூடாத விஷயமாகும் என்பது அந்த கதீஸிலிருந்து தெள்ளத்தெளிவாகின்றது. அக்காரணத்தாலாகும் அப்பெண்கள் இருவரும் மரணத்தின் எல்லையை எட்டிவிட்டது. எல்லா தீய செய்திகளும் நோன்பு நோற்ப்பை அழித்துக் கொள்ளும் என்பது ஒரு உண்மையாகும். **அனுபவத்திலிருந்து உணரயியலுவது அல்லாஹ்வின் களங்கமற்ற அடியார்களுக்கு நோன்பு நோற்பு என்பது ஒரு கவலைக்குரிய விஷயமல்ல. அவர்கள் "முத்தகீங்கள்" ஆவார்கள். அவர்களின் உள்ளங்கள் அல்லாஹ்வைக் குறித்து அஞ்சியவாறிருக்கும். அவர்களைப் பொறுத்தவரையில் நோன்பு நோற்பு ஒருபொழுதும் ஒரு பெரும் சோதனையாகயிருக்காது. பாவிகளுக்கு நோன்பு நோற்பு என்பது ஒரு கடினமான விபத்தாகவேயிருக்கும்.**

இந்த பிரசங்கத்தை நான் நிறைவுபடுத்துகின்றேன். நேரக்குறைவு காரணத்தாலும் மட்டுமின்றி நம் உறுப்பினர்களுக்கு அவர்களின் வேலைக்காக திரும்ப வேண்டியதுமுண்டு. வருகின்ற வெள்ளிக்கிழமையும் இவ்விஷயத்தை தொடர்ந்து கொள்வதற்கான "தௌஃபீக்" அல்லாஹ் வழங்கிக் கொள்வான் என நான் எதிர்பார்க்கின்றேன். இன்ஷா அல்லாஹ். ஆறு விஷயங்களில் இரண்டு

மட்டுமே விளக்கி கொண்டது. மற்று நான்கு விஷயத்தை வருகின்ற வாரத்தில் இன்ஷா அல்லாஹ்! விளக்கிகொள்வேன்.

**உலகெங்குமுள்ள அனைத்து முஸ்லீம் சகோதரர்களுக்கும் எனது தோழர்களுக்கும் ரமலான் முபாரக் நேர்கின்றேன்.** இந்த அருள் நிறைந்த மாதத்தில் உங்கள் அனைவர்கள் மீதும் அல்லாஹ் அருள் கொடைகள் பொழிவானாக. திறந்த கைகளுடன் ரமலான் நம்மை வரவேற்பதற்கு இதே ஆயத்தமாக வருகின்றது. மறித்தும் நாமும் திறந்த கைகளுடன் ரமலானை வரவேற்பதற்கு ஆயத்தமாகிட வேண்டும். அல்லாஹ் நமக்காக அனுப்பிவைத்திருக்கும் இந்த அசாதரணமான சிறப்பு அதிதியை திறந்த கைகளுடன் வரவேற்று கட்டித் தழுவிட நாமும் ஆயத்தமாக வேண்டும். உண்மையில் இது அல்லாஹ் நம்மீது பொழியும் புதயலாகும் (Treasure). இந்த புதயலை மிக நல்ல முறையில் பயன்படுத்திட வேண்டியது நம் கடமையாகும். அதற்கான மிக சிறந்த வழி, நம் அன்புக்குரிய தூதர் முஹம்மது(ஸல்) வின் சுன்னத்தை பின்பற்றிக் கொள்ள வேண்டும் என்பதாகும். இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817